**வத்தேகம நகர சபை - 2023**
**-----------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வத்தேகம நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவுக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்கள் பொழிப்புக்களை நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) உப பிரிவு 181(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, வத்தேகம நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றுமு உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது 02 குப்பை வண்டிகளின் திருத்த வேலைக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 168,552 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 5,253,100 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வுகூற முடியாமல் உள்ளது. | சரியாக இனங்கண்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | முன்னைய ஆண்டின் போது குப்பை வண்டிகள் விற்பனை மூலம் மீளாய்வாண்டில் கிடைத்திருந்த ரூபா 440,127 தொகை மீளாய்வாண்டின் வருமானம் என கணித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என. | சுரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டிற்கான கடை வாடகை தண்டப் பண வருமானம் ரூபா 165,946 தொகை இரண்டு முறை கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 165,946 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | மீளாய்வாண்டின் போது நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மூலதனச் செலவுகள் ரூபா 191,468 தொகை நிதிக் கூற்றுக்களில் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | வருமானச் செலவுக் கணக்கிற்கு சீராக்கல் மேற்கொள்ளப்படவில்லை என. | வருமானச் செலவுக் கணக்கில் பதிவு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | தொடர்ந்து வரும் வருடத்திற்காக கிடைக்கப்பட்டிருந்த கடை வாடகை வருமானம் ரூபா 297,125 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | முன்னைய ஆண்டில் பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு பாடசாலை புத்தகங்கள் வங்குவதற்காக ரூபா 2,500,000 தொகை பிழையான முறையில் கடன்கொடுத்தோரின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | நகர சபையின் காலம் முடிவடைந்ததனால் செயற்திட்டம் நிறுத்தப்பட்டிருந்தது என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | அடிப்படையொன்றின்றி 2021 ஆண்டில் ஜீப் வண்டியொன்றின் திருத்த வேலைகளுக்காக என குறிப்பிட்டு ரூபா 1,000,000 தொகை போலியாக கடன்கொடுத்தோரின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | திருத்த வேலைக்காக அனுப்பப்பட்டுள்ளது என. | -மேற்படி- |
| (ஐ) | முன்னைய ஆண்டுகளின் போது ஏல விற்பனை செய்யப்பட்டிருந்த மற்றும் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 1,071,429 இற்கான 08 அலகுகள் வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் தொடர்ந்தும் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | -மேற்படி- |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுககளில் காட்டப்பட்டுள்ள 05 கணக்கு விடயங்களுக்கான மீதிகள் துணைப் பதிவேடுகளில் காணப்படும் மீதிகளுடன் இணக்கஞ் செய்த போது ரூபா 405,308 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது. | எதிர்காலத்தில் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்படும் என. | வித்தியாசத்தை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 8,420,720 இற்கான 09 சொத்து விடயங்களுக்குரிய உளமையை உறுதிப்படுத்தல், உறுதிப்படுத்தும் பதிவேடுகள், மீதிகளை உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றை திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் சரியாக இனங்கண்டு பதிவேடுகள் சமர்ப்பிக்கப்படும் என. | மீதிகளை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஆவணங்கள் கோப்புக்கள் தயாரிக்க வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) பிரிவு 118 | அதிகாரப் பிரதேசத்தில் பொதுக் கழிவறை வசதிகள் வழங்குதல் மற்றும் பொது மற்றும் தனியார் கழிவறைகள் உரிய முறையில் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட ஆதனம் புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமானது என. | சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலக்கம் 2235/64 மற்றும் 2021 ஜூலை 08 ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் திருத்தப்பட்ட 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டம் | அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றுக் கொள்ளாமல் நிர்மாணிக்கப்பட்டிருந்த 04 கட்டிடங்கள் தொடர்பாக நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | சட்டரீதியாக்கிக் கொள்வதற்கு உரிய தரப்பினரை அறிவுருத்தப்பட்டது என. | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| **(இ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் கோவை** | | | |
| | நிதிப் பிரமாணம் 571(3) | காலவதியாகிய ரூபா 97,413 இற்கான 27 வைப்பு மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். |
| (ஈ) | 2016 மார்ச் 17 ஆந் திகதிய 2016/3 இலக்கங் கொண்ட மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையில் பிரிவு 06 | 2022 ஜூன் 22 ஆந் திகதிய விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து புதிய பெறுமதி மதிப்பீடொன்று கிடைத்திருந்த போதிலும் 14 கடையறைகளின் உடன்படிக்கைகளை புதுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | புதிய உடன்படிக்கைகளுக்கு இணக்கம் தெரிவித்திருக்கவில்லை என. | சுற்றறிக்கைகளின் படி செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 15,527,690 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 13,437,587 தொகை ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2023 மதிப்பீட்டு வருமானம் | 2023 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2023 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022 மதிப்பீட்டு வருமானம் | 2022 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 5,670,000 | 5,646,017 | 6,126,811 | 2,709,147 | 5,631,500 | 5,733,379 | 4,999,314 | 3,189,941 |
| வாடகை | 100,000 | 8,117,843 | 8,131,162 | 185,808 | 10,000 | 8,257,365 | 8,063,755 | 199,127 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 201,000 | 1,263,865 | 1,235,925 | 30,000 | 251,000 | 1,104,785 | 1,102,725 | 2,060 |
| ஏனைய வருமானங்கள் | 1,875,000 | 28,146,281 | 25,825,069 | 10,393,112 | 1,875,000 | 25,739,328 | 20,162,971 | 8,071,900 |
| | **7,846,000** | **43,174,006** | **41,318,967** | **13,318,067** | **7,767,500** | **40,834,857** | **34,328,765** | **11,463,028** |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| i. மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 2,709,148 தொகை காணப்பட்டதுடன் அலகு ஒன்றின் வீதவரி நிலுவை ரூபா 10,000 இனை மிகைத்துள்ள 30 வீதவரி அலகுகளின் கூட்டுத்தொகை ரூபா 559,591 இற்கான வீதவரி நிலுவையை அறவீடு செய்திருக்கவில்லை. | ஆதனங்களை தடை செய்தல் மற்றும் வெளிக்கள கடமைகளின் மூலம் நிலுவை அறவிடப்படும் என. | நிலுவை வீதவரி அறவிடப்பட வேண்டும். |
| ii. 1946 இன் 30 ஆம் இலக்க வீதவரி மற்றும் பெறுமதி மதிப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் பிரிவு 20 இற்கு இணங்க 5 வருடங்களுக்கு ஒருமுறை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2015 ஜனவரி 02 திகதிய பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் படி மீளாய்வாண்டிற்கான வீதவரி அறவீடு செய்யப்பட்டிருந்தது. | பெறுமதி மதிப்பீடு திருத்தம் மேற்கொள்ளப்படுகின்றது என. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

**(ஆ) ஏனைய வருமானங்கள்**

| | | | |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 9,100,788 தொகையாக காணப்பட்டதுடன் ஒரு அலகிற்கு நீர் கட்டண நிலுவை ரூபா 5,000 இனை மிகைத்துள்ள 570 நீர்க் கட்டண அலகுகளின் கூட்டுத்தொகை ரூபா 6,611,479 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை. | நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை நீர்க் கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ii) | 757 நீர் நுகர்வோருக்காக நீர்மானி பொருத்தியிருக்காததுடன் அந்த நுகர்வோர்களிடம் வீடுகளில் இருந்து ரூபா 400 உம் வர்த்தகங்களில் இருந்து ரூபா 550 இற்கான நிரந்தரக் கட்டணம் ஒன்று அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. | எதிர்காலத்தில் நீர்மானிகள் பொருத்தப்பட்டு கட்டணம் அறவீடு செய்யப்படும் என. | நீர்மானிகள் பொருத்தி உரிய கட்டணம் அறவிடப்பட வேண்டும். |
| (iii) | அதிகாரப் பிரதேசத்திற்குரிய 2368 நீர் நுகர்வோர்கள் காணப்பட்ட போதிலும் 760 நீர் வழங்கள்களுக்குரிய நீர் மானிகள் பொருத்தப்பட்டிருக்காததுடன் நிரந்தர கட்டணம் மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. அவற்றில் 101 நீர் வழங்கல்களுக்கான ரூபா 10,000 இனை மிகைத்திருந்த ரூபா 1,640,602 தொகை காணப்பட்டது. | நீர் மானிகள் பொருத்தப்பட்டு இருக்கவில்லை என. | நீர் மானிகள் பொருத்தி கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| **(இ)** | **நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்** | | |
| | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 492,325 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 800,000 தொகை காணப்பட்டது. | பிரதேச செயலகம் மற்றும் பிரதான செயலாளர் அலுவலகத்தை அறிவுருத்தப்பட்டது என. | நிலுவை முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் தருவித்துக் கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் சாட்டப்பட்டிருந்த கருமங்கள் நிறைவேற்றுதல்

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | குப்பை செயற்களத்தின் PET போத்தல்கள் மற்றும் குப்பைகள் வகைப்படுத்தும் இடத்தில் பொலிதீன் உட்பட உக்காத குப்பை இருப்பொன்று குப்பை செயற்களம் அமைந்துள்ள காணியின் மூளையில் வயல் காணி ஒன்றில் குவிக்கப்பட்டிருந்ததுடன் மழை காலங்களில் இங்கு நீர் தங்குவதனால் சுற்றாடலுக்கு சேதம் ஏற்படக் கூடியவாறு துர்நாற்றம் வீசிக்கொண்டு இருந்தது. | அடுத்த வருடம் குப்பை செயற்களம் நிர்மாணிக்கப்படும் என. | குப்பை முகாமைத்துவம் செய்ய வேண்டும். |
| (ஆ) | நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) பிரிவு 118 ஏற்பாடுகளின் படி பிரதேசத்தின் வீடுகளில் மலக் கழிவுப் பொருள் அகற்றுவதற்காக சாக்கடை வாகன சேவையொன்று நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதன் காரணமாக பல்வேறு நபர்கள் முறைசாரா விதமான அந்த அலுவல்களை மேற்கொண்டிருந்தது. | தனியார் நிறுவனங்களின் மூலம் மற்றும் ஏனைய சபைகளின் மூலம் குறிப்பிட்ட கருமம் நிறைவேற்றப்படுகின்றது என. | கட்டளைச் சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | சபைக்கு சொந்தமான 03 நீர்ச் செயற்திட்டங்களில் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த நீர் மாதிரி பரிசோதனை அறிக்கையின் படி ஈ கோலி (E Coli) பக்டீரியா செறிவு 944-2496 வரை வீச்சில் காணப்பட்டதுடன் கொலிபோம் (Coliform) பக்டீரியா 56-190 இற்கு இடைப்பட்டு காணப்பட்டது. நகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) பிரிவு 104 இன் படி பொது மக்களின் சுகாதார அதிகாரி என்ற வகையில் சபை செயற்பட வேண்டுமென சுட்டிக் காட்டப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் குடிப்பதற்கு பொருத்தமற்ற அசுத்த நீர் பொது மக்களுக்கு வினியோகிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் என. | சுத்தமான குடிநீர் வினியோகிக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடன்பட்டோர் மீதி ரூபா 2,488,294 தொகை காணப்பட்டதுடன் அவற்றில் 3 வருடங்களுக்கும் 5 இற்கும் இடைப்பட்ட காலத்திற்குரிய ரூபா 690,876 தொகை காணப்பட்டதுடன் 05 | இந்த மீதிகள் தொடர்பாக கண்டறிந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | முறைப் பிரகாரம் பதிவழிப்பதற்கு அல்லது பெற வேண்டிய மீதிகளை அறவீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருடங்களை விட மிகையான காலம் காணப்படுகின்ற மீதி ரூபா 1,500,976 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை. | | |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 02 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,477,189 தொகை காணப்பட்டதுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த காலப்பகுப்பாய்வின் படி 1 வருடத்திற்கும் 5 இற்கும் இடைப்பட்ட காலத்திற்குரிய கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 4,292,585 இற்கான மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உள்ளூராட்சி திணைக்களத்தை அறிவுருத்தப்பட்டது என. | செலுத்த வேண்டிய மீதிகள் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மாத்தளை வீதி துன்ஒயா கும்புர/ புஸ்ஸேபிடிய எனப்படும் மியன்பாஹேவத்த எனும் காணி குப்பை செயற்கள வளவில் 08 வீடுகள் அங்கீகாரமின்றி நிர்மாணித்து வதிவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் உரித்தாக்கப்படும் என. | அங்கீகாரமின்றி வதிவோரை அகற்றி சொத்துக்களை உரித்தாக்க வேண்டும். |
| (ஈ) | 2021 ஆண்டில் வீதிகளை காயப்படுத்தியதற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 221,450 தொகையினை தீர்த்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்யப்படும் என. | வைப்புக்கள் தீர்க்கப்பட வேண்டும். |
| (உ) | 2018 ஆண்டில் விபத்துக்குள்ளாகிய பெக்கோ இயந்திரம் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(4) விசாரணை பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் இதன் காரணமாக 05 வருடங்களை விட மிகையான காலம் முதல் திருத்த வேலை மேற்கொள்ளாமல் அழிவடைதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. | நி.பி. 104(4) விசாரணை மேற்கொள்ளப்பட்டது என. | பரிந்துரைகள் செயற்படுத்த வேண்டியதுடன் இயந்திரத்தை பழுதுபார்த்து பயன்படுத்த வேண்டும். |
| (ஊ) | சபைக்கு சொந்தமான தெல்கஹகந்த காணியின் ஒரு பகுதி 44 நபர்களினால் தனதாக்கப்பட்டு அங்கீகாரமின்றி வதியப்பட்டிருந்தது. | சபைக்கு நட்டம் ஏற்படாதவாறு விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என. | அங்கீகாரமற்ற வதிவோர்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 5,778,125 இற்கான 07 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் 04 வருடங்களுக்கும் 15 இற்கும் இடைப்பட்ட காலவீச்சில் விளைவற்று மற்றும் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது. | திருத்த வேலை மேற்கொள்வதற்கு அனுப்பப்பட்டுள்ளது என மற்றும் ஏனைய வாகனங்கள் நிறுத்தப்பட்டு காணப்படுகின்றது என. | ஏல விற்பனை செய்வதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபையினால் நடாத்தப்படும் பொருட் பதிவேட்டின் படி உத்தியோகத்தர்களுக்கு பண்டங்கள் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் பிரதான பொருட் பதிவேடொன்று நாளதுவரை பேணி இருக்காமையால் அனைத்து சொத்துக்களின் உண்மைத் தன்மையினை பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. | பதிவேடுகள் பரிசோதனை மேற்கொள்ளப்படும் என. | பரிசோதனை நாளதுவரை பேணிச் செல்ல வேண்டும். |

### 3.4 செயற்திட்டங்கள், செய்பணிகள் அல்லது மூலதன வேலை தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்த பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 6,567,050 இற்கான 27 அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்காததுடன், பாதீட்டின் மூலம் ஒதுக்கப்படாத ரூபா 11,347,025 இற்கான 47 செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | சபைத் தீர்மானங்கள் மீது மேற்கொள்ளப்பட்டது என. | வருடாந்த பாதீட்டுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும். |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியை இணக்கஞ் செய்த போது 04 பதவிகளில் 09 வெற்றிடங்களும் 2 பதவிகளில் 5 மிகைகளும் காணப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் மிகைப் பதவிகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகும் என. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் படி குறிப்பிட்ட அலுவல்கள் மேற்கொள்ள வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 சுற்றாடல் சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கழிவுநீர் முகாமைத்துவம் தொடர்பாக முறையான வேலைத் திட்டமொன்று சபையிடன் காணப்படாததுடன் கழிவுநீர் | கழிவுநீர் வடிகால் முறைமையொன்று | முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| வாய்க்கால் முறைமையொன்று நடாத்தியிருக்கவில்லை. | தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என. | |

**4.2 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் விதியின் படி சபையினால் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் மற்றும் இலக்குகள் இனங்கண்டு அவற்றை நெருங்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலைபேறான அபிவிருத்தி சுட்டிகளை இனங்கண்டு குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். |